**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARANI.**

**S.C.No.58/2014**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.8** |
| **Name** | **:** | **திரு.ஆண்டி** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.08.2022.**

**முதல் விசாரணை -**

**நான் ஒய்வு பெற்ற வருவாய் உதவியாளர். 2012ஆம் ஆண்டு மேல்சாத்தமங்கலம் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். பொறுப்பு வினாயகபுரம் கிராமத்தின் கிராம நிர்வாக அதிகாரியாக இருந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக 27.4.2012 அன்று காலை 9 மணிக்கு மேல் வினாயகபுரம் கிராமத்தில் சரவணன் வீட்டின் அருகில் என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார். சரவணன் என்பவரின் குழந்தை மதன்குமார் சரவணன் என்பவரின் வீட்டின் திண்ணையில் சடலமாக இருந்ததை பார்த்தேன். என் முன்னிலையிலும் கிராம உதவியாளர் முன்னிலையிலும் ஆய்வாளர் விசாரணை செய்தார். இறந்த குழந்தையின் உடலில் இருந்த காயங்களை பார்த்தார். தலையில்**

காயம் இருந்தது. இரண்டு கைகளிலும் சதை பிச்சிபோய் இருந்தது. கழுத்தில் ஒரு கருப்பு கலர் அரைநாண் கயிறு ஒன்று இறுக்கி கட்டப்பட்டிருந்தது. மேற்படி குறிப்புகளை குறித்து ஆய்வாளர் ஒரு பார்வை மகசர் எழுதினார். அதற்கு நானும் கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். பார்வை மகசர் அ.சா.ஆ.2. பிரேதத்தில் இருந்த கருப்பு அரைநாண்கயிறை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகசரில் நானும் என்னுடைய கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கருப்பு அரைநாண் கயிறு தான் கைப்பற்றப்பட்ட கருப்பு அரைநாண்கயிறு.( சான்று பொருள் 1). அன்றைய தினமே பகல் 1.30 மணிக்கு பெரியகொழப்பலூர் பெரிய காலனி சுடுகாடு அருகே ஆய்வாளர் என்னை வரச்சொன்னார். நானும் சென்றேன். அங்கு ஆய்வாளர் மற்றும் மோகன் என்பவர் இருந்தார். மோகன் என்பவரை விசாரித்தார். மோகன் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்தார். மேற்படி வாக்குமூலத்தில் நானும் என்னுடைய கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். சாட்சி தற்போது வாக்குமூலம் அல்ல ஒப்புதல் வாக்குமூலம் என்று சாட்சியம் அளிக்கிறார். ஆய்வாளர் விசாரணையின்படி கொலை செய்யப்பட்ட இடத்திற்கு மோகன் சொல்ல அந்த இடத்திற்கு சென்றோம். அங்கு மோகன் எப்படி கொலை செய்தார் என்பதை செய்துக்காண்பித்தார். பின்பு அந்த கிணற்றுக்கு அருகில் உள்ள மேட்டு பகுதியில் இருந்து வெள்ளி அரைநாண்கொடியை எடுத்து கொடுத்தார். அவர் கொடுத்த அரைநாண்கொடியை கைப்பற்றுதல் மகசரில் ஆய்வாளர் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரில் நானும் கிராம சிப்பந்தியும் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4. கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5. வெள்ளி அரைநாண் கயிறை அடையாளம் காட்ட முடியும். நீதிமன்றத்தில் காட்டப்படும் வெள்ளி அரைநாண் கயிறு தான் அது ( சான்று

பொருள் 2) ஆய்வாளர் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> ( எதிரி இன்று நீதிமன்றம் ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

காலையில் விசாரணை முடித்தபிறகு மோகனை கைது செய்வதற்கு முன்பே என்னை அழைத்துச் சென்றார்கள் என்றால் சரி தான். என்னை விசாரித்த ஆய்வாளர் பெயர் தெரியாது. எதிரியை கைது செய்த இடத்தில் ஆய்வாளர் உடன் 6,7 பேர் இருந்தார்கள். அந்த 6,7 பேரும் சீருடையில் இருந்தார்களா, சாதாரண உடையில் இருந்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. அந்த 6,7 பேரும் காவல்துறையை சேர்ந்தவர்கள் என்றால் சரி தான். எதிரியை பிடித்து விசாரிக்கும்போது 6,7 காவல்துறையினரும் நானும் சிப்பந்தியும் அப்படியே வந்துவிட்டோம் என்றால் சரி தான். நானும் சிப்பந்தியும் தனியாக வந்தோம். எதிரியை கைது செய்து விசாரித்தஇடத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் ஒரு 50 பேருக்கு மேல் கூட்டமாக இருந்தார்கள். மேற்படி 50 நபர்களும் அந்த கிராமத்தை சேர்ந்தவர்கள். அந்த 50 பேர்களும் நகையை தேடிக்கொண்டு இருந்தார்கள். மேற்படி 50 பேரும் எதிரி வருவதற்கு முன்பும், பின்பும் தேடினார்கள் என்றால் எதிரி வந்த பிறகு தான் தேடினார்கள். நான் சொல்வது போல் கிணற்றுக்கு அருகில் ஒரு மேட்டில் இருந்து அரைநாண்கொடியை எடுத்து தரவிவல்லை என்றாலும், ஊர் மக்கள் வெட்டவெளியில் இருந்த ஒரு அரைநாண்கொடியை தான் தேடி கண்டு பிடித்தனர் என்றால் கைது செய்யப்பட்ட மோகன் தான் எடுத்துக்கொடுத்தார். நான் சொல்வது போல் எதிரி எந்தவொரு பொருளையும் மறைவிடத்தில் இருந்து எங்கள் முன்னிலையில் எடுத்துக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் எந்த கைதும் நடைபெறவில்லையென்றாலும், எதிரி சம்பவ தினம் அன்று ஊர் பொது மக்கள் உடன் தான் காலையில் இருந்து மாலை வரை

தேடிக்கொண்டு இருந்தார் என்றால் சரியல்ல. எதிரி மோகனை 1.30 மணிக்கு சுடுகாட்டில் தான் முதலில் பார்த்தேன். நான் கிராமத்திற்கு செல்வதற்கு முன்பு ஊர் பொது மக்கள் சரவணன் வீட்டின் முன்பு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அவ்வாறு இருந்தபோது அந்த கூட்டத்தில் மோகனும் இருந்தார் என்றால் சரி தான். நான் சொல்வதுபோல் எதிரி எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் தரவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் போடவில்லை. கைப்பற்றுதல் மகசர் எழுதிய காவல் அலுவலரின் பெயர் என்னவென்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை எழுதுவதற்கு தயாராக போலிசார் பேப்பர், எழுதும்மட்டை போன்ற பொருட்களை அந்த இடங்களில் வைத்திருந்தார்களா என்றால் வைத்திருந்தார்கள். ஆய்வாளர் ஆவணங்களை எழுதினாரா என்றால் அதை பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நான் கையொப்பம் போட்ட தாள்களில் ஆவணத்தை தயாரித்தவர் பெயர் மற்றும் பதவி இருந்தது என்றால் சரி தான். நான் கையொப்பம் போடும்போது ஆவணத்தை தயாரித்தவரின் பெயரோ, பதவியோ என்னிடம் சொல்லப்படவில்லை என்றால் சரி தான். அதனால் தான் அந்த ஆவணம் நான் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் தயாரிக்கவில்லை என்றால் சரியல்ல. பத்து வருடம் முன்பு தயாரிக்கப்பட்ட ஆவணத்தை பார்த்தவுடன் தான் எனக்கு நினைவு வந்தது என்றால் சரி தான். பார்த்தவுடன் ஆவணத்தை தயாரித்த அதிகாரி பெயர் மற்றும் பதவி தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். அதிகாரியின் பெயர் தற்போதும் தெரியாது என்றால் தெரியாது. பதவி மட்டும் தான் தெரியும். நான் கையொப்பம் போட்ட தாள்களில் யார் யார் கையொப்பம் போட்டார்கள் என்ன சங்கதிகள் எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் தெரியாது

**என்றால் நானும் சிப்பந்தியும் கையொப்பம் போட்டோம். அதில் எழுதப்பட்ட சங்கதிகள் ஆரம்பம் மற்றும் முடிவுகள் பற்றி தெரியாது என்றால் சரி தான்.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.